1972 மார்ச் 25]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு குறிப்பிட்ட அளவு உதவித் தொகையை வழங்குகிறது. அதற்கு மேல் சில வகை வசதிகளைச் செய்வதற்காக மாநில அரசும் தொகை அளிக்கிறது. அதற்கு மேலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது மக்களிடமிருந்து நிதி பெற்று அதன் மூலமாக ஏழை எளியவர்களுக்கு உதவித் தொகை சேர்த்து வழங்குகிறார்கள்.

உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்,

* 706 **வினா—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70-71-ஆம் ஆண்டுகளில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

(இ) அவர்களுள் எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) & (இ): 1969-70-71 ஆகிய மூன்றாண்டுகளில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் வழக்குகள் தொடரப்பட்டோர், தண்டிக்கப்பட்டோர் ஆகியவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

வட்டத்தின் பெயர்.	ஆண்டு.	வழக்குகள் தொடரப் பட்டவர்களின் எண்ணிக்கை.	தண்டிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
செஞ்சி	1969	16	15
ஷ	1970	6	3
ஷ	1971	3	3
திண்டிவனம்	1969	16	16
ஷ	1970	15	15
ஷ	1971	11	10

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இப்படி உணவுக் கலப்படத்தை பெரிய வியாபாரிகள்தான் செய்கிறார்கள். கலப்படம் செய்வதால் பொதுமக்களுக்கு எவ்வளவு சுகாதாரக் கேடு வருகிறது என்பதை அரசு அறிகிறது. கலப்படம் செய்கிறவர்களைத் தண்டிப்பதோடு அவர்களுடைய கடைகளையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உணவு கலப்படச் சட்டம் அகில இந்திய அளவிலே பாராளுமன்றத்திலே உருவானது. அதிலே தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு மத்திய அரசுதான் ஒத்துழைக்க வேண்டும். பெரும்பாலும் சில்லரை வியாபாரிகள்தான் தண்டிக்கப்படு கிறார்கள் என்ற குறை இருக்கிறது. சில்லறையாக வாங்கி விற்கிறவர்கள் கவனம் செலுத்தி கலப்படம் இல்லாத பொருட்களை வாங்கி பொது மக்களுக்கு வழங்க வேண்டுமென்று அரசு மிகவும் வற்புறுத்தி வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : அரிசியில் கல் கலக்கிறார்களே, அதுவும் உணவு கலப்படச் சட்டத்திலேதானே வரும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தச் சட்டத்திற்குள்தான் வரும். ஆனால், வேண்டுமென்றே கலந்தார்களா என்பது விவாதத்திற்குரிய தாகும்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : பெரும்பாலும் பால் கேஸ் கள்தான் இதிலே வருகின்றன என்று சொல்லப்படுகிறது. மற்ற கேஸ்கள் எல்லாம் விடப்படுகின்றன. எனவே இதிலே பாலுக்காகப் போடப்பட்ட கேஸ்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், அரிசியிலே கலப்படம் செய்யக் கூடிய வகையில் கல்லை அரிசி போன்று தயாரிக்கிற தொழிற்சாலை இருந்ததாகவும் அதைப் பற்றிச் செய்தியெல்லாம் வந்ததே, அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்விக்குரிய செஞ்சி, திண்டிவனம் வட்டத்திலே அப்படி இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், மத்திய அரசாங்கத்தினுடைய கலப்பட சட்டத்திலே பல கிளாஸ்கள் நம்முடைய மாநிலத்திலே அமல் படுத்தப்பட கஷ்டம் இருக்கிறது. எனவே அதை மாற்றியமைக்க வேண்டு மென்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி சில ஆலோசனைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த அளவுக்கு மத்திய அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளும் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

Gratuity to Industrial Workers

*707 *Q.*—THIRU N. K. PALANISWAMY *:* Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce uniform gratuity schemes for the Industrial Workers of the State ; and

(*b*) if so, the details of the same ?